முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

17.10.2024

1. தரும குணம் தயை சிந்தை கொண்ட
தவராஜன் என் சீடர் மக்களே
பெருமை மிக்க ஞான வாழ்வை
பேருலகில் நீங்களெல்லாம் அடைய

2. அடையவே அரங்கமகான் யானும்
அருளாசிதனை குரோதி நங்கை திங்கள்
கடைவார குருவார அருளாசியாக
கடைத்தேற வேண்டி வரம் தருவேன்

3. தருகவே பிரணவக் குடில் தன்னில்
தருகின்ற அன்னதானமும்
முருகப்பெருமான் ஆசி தந்தருளும்
முழுமை தரும் அருளமுது ஆகுமப்பா

4. அப்பனே தொடர்ந்து வந்து முழுமதியில்
அருளமுது உண்ணும் மக்களுக்கு
சுப்பனுடன் அரங்கனென் துணை
சூட்சும சக்தியாக வந்தருள்புரியும்

5. அருள்புரியும் அன்னதான சேவையில்
அணுகிப் பொருளுதவி செய்து
வரம் கேட்க வருபவர்க்கெல்லாம்
வடிவேலனுடன் அரங்கன் யானும்

6. யானும் விரும்பும் வரங்கள் தந்து
உயர் ஞானம் பிறவா பெரும்பேறு
ஞானவழி அடைய ஆசி பலம்
நானிலத்தில் தந்தருளி துணை நிற்போம்

7. நிற்கவே என் குல மக்களாகி
நிலவுலகில் ஞானவான்களுமாகி
அற்புதம் பல கண்டடைந்து வாழ
அனுதினமும் பூசை செய்து வர

8. வருகவே வையகம் தன்னில்
வறுமைதனை விரட்டி வளம் காண்பர்
தருமபலம் கூட்டி தனித்துவம்
தரணியில் கண்டு சிறந்திடுவர்

9. சிறந்தநல் ஞானிகள் பலம்
சித்திகள் தரும் மகா சக்தி பலமும்
அருந்தவசி அரங்கன் என் நாமம்
அனுதினமும் செபிக்க அடைவரப்பா

10. அப்பனே கலியினில் அரங்கனென்
ஆற்றல்மிக்க ஞானப்படைகளே
காப்புத் தந்து உலகை மீட்கும்
கட்டாயம் பேரிடரையும் வெல்லும்

11. வெல்லும் என் மக்கள் தருமம்
வெல்லும் என் மக்கள் பூசை
வெல்லும் இந்தப் பேருலகையே
வேலவன் வந்து ஆளும் வண்ணம்

அரங்கமகான் என் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–